Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/22**

Paper 2 Reading and Writing **October/November 2025**

INSERT **1 hour 45 minutes**

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **4** pages.

NL 343514/2
© UCLES 2025

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு 1, 2, 3 **கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 1

**தொழில்நுட்பம் சார்ந்த செய்திப் பரிமாற்றங்கள்**

நீங்கள் வகுப்பறையில் அமர்ந்து ஆசிரியர் கற்பிப்பதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆசிரியர் கற்பிக்கும்போது அவர் வகுப்பறையில் அங்கும் இங்குமாக நடந்தவண்ணம் பாடத்தை நடத்துகிறார். மாணவர்கள் சிலர் அவரது முகத்தைப் பார்த்தவண்ணம் உள்ளனர். சில மாணவர்கள் தமது புத்தகங்களில் குறிப்புகளை விரைவாக எடுப்பது உங்களுக்குத் தெரிகிறது. சில மாணவர்கள் தலையில் கை வைத்தவண்ணம் அமர்ந்துள்ளனர். இவை எல்லாம் உங்கள் கண்கள் கவனிக்கும் விடயங்களாக உள்ளன. குறிப்புகளை எடுக்கும் மாணவர்களைப் பார்த்து நீங்களும் குறிப்புகளை எடுக்கத் தொடங்குகிறீர்கள்.

இதையே ஒரு ஆன்லைன் வகுப்பு என்று வைத்துக்கொள்வோம். ஆன்லைன் வகுப்பில் பல நன்மைகள் உள்ளன. எனினும் அதிலுள்ள பாதகங்களை இங்கு நோக்குவோம். ஆசிரியர் கணினிக்கு முன்னால் இருக்க அவரது முகம் மட்டும் உங்களுக்குத் தெரிகிறது. அவர் எங்கு இருக்கிறார் என்பதோ அல்லது அவரது கையில் என்ன உள்ளது என்பதோ உங்களுக்குத் தெரியாது. அவரது தொழில்சார் திறமை முழுவதும் வெளிப்படுத்தப்படாத உணர்வு உங்களுக்குள் தோன்றுகின்றது. மற்ற மாணவர்கள் பலர் முகம் தெரியாத வகையில் வகுப்பில் இணைந்திருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. வகுப்பின் இறுதியில் உங்களுக்கு நேரத்தை வீணாக்கிய ஒரு உணர்வும் விரக்தியும் தோன்றுகின்றன.

இது போன்று தொழில் செய்யும் இடங்களிலும் சில பிரச்சினைகள் உள்ளன. தொழில்சார் செய்திப் பரிமாற்றங்கள் பல சமயங்களில் தவறான உணர்வை ஏற்படுத்துகின்றன. மதுமிதாவுக்கு "இன்று வேலை முடிந்ததும் என்னை வந்து பார்க்கவும்" என்று உயர் அதிகாரியிடம் இருந்து ஒரு மின்னஞ்சல் செய்தி வருகின்றது. இந்த ஒரு வரியில் அமைந்த செய்திக்குப் பின்னால் இருக்கும் தொனி கோபம் நிறைந்ததா, மகிழ்சியானதா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் மதுமிதா குழப்பமடைந்தாள். கடந்த இரு நாட்களுக்குள் வேலையில் ஏதேனும் தவறு நடந்து விட்டதா என்றும் உயர் அதிகாரி எந்த விடயத்தைப் பற்றிப் பேசவுள்ளார் என்றும் பலவாறாகச் சிந்தித்துக் கவலைப்பட்டாள். வேலையில் கவனம் செலுத்த அவளால் முடியவில்லை. மாலையில் வேலை முடிந்து உயர் அதிகாரியைச் சந்தித்தபோது அவளுக்கான பதவி உயர்வுக்கான கடிதத்தை அவர் மதுமிதாவிடம் வாழ்த்துக்களோடு கொடுத்தார்.

தொழில்நுட்பம் சார்ந்த செய்திப் பரிமாற்றங்கள் பல சமயங்களில் இப்படித்தான் அமைகின்றன. மனதில் தெளிவின்மையும் பல கேள்விகளும் தோன்றும்போது மனித மனம் எப்போதும் ஒரு விடயத்தை எதிர்மறையாகச் சிந்திக்க ஆரம்பிப்பது இயல்பாகும். உங்களை ஒரு இருட்டு அறைக்குள் விட்டுச் சென்றால் உங்கள் முன்னால் பொற்காசுகள் நிறைந்த பெட்டி உள்ளதாக நீங்கள் கற்பனை செய்ய மாட்டீர்கள். அதற்கு மாறாக மனம் பயத்துடன் அந்த இருட்டறைக்குள் உள்ள இடர்களையும் ஆபத்துகளையும்தான் நினைத்துப்பார்க்கும். இது போன்றதுதான் சந்தேகங்களோடு கூடிய இடைவெளிகளை நிரப்புவதற்கு மனம் வீணான கற்பனைகளுக்குள் உட்படுதலும். இவ் எதிர்மறையான சிந்தனையானது இருவருக்கிடையிலான உறவைப் பாதிக்கச் செய்ய வல்லதாக இருக்கும். ஒவ்வொரு நபருடைய அணுகுமுறைகள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் என்பவற்றைப் பொறுத்து அவர்கள் செய்திகளைப் புரிந்து கொள்ளும் தன்மையும் வேறுபடும்.

முகம் நோக்கிச் செய்யப்படும் செய்திப் பரிமாற்றத்தில் உடல் அசைவுகளும் குரலின் தொனியும் செய்திப் பரிமாற்றத்திற்குத் துணை புரியும். தொலைபேசி சார்ந்த உரையாடல்களில் உடல் அசைவுகள் கண்ணுக்குப் புலப்படாமல் போய்விடுகின்ற போதிலும் குரலின் தொனியானது இருவரும் அந்த உரையாடலைப் புரிந்துகொள்ளத் துணை புரியும். ஆனால், குறுஞ்செய்திகளில் உடல் அசைவுகளும் குரலின் தொனியும் மறைக்கப்பட்டு எழுத்து வடிவிலான செய்திகள் மட்டும் பரிமாற்றத்துக்கு உட்படும். இது செய்திப் பரிமாற்றத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளப் பல வகைகளில் வழிவகுக்கும். "எழுத்து வடிவ செய்திப் பரிமாற்றம் மூலமாக இருவருக்கிடையிலான உணர்வுசார் பிரச்சினைகளுக்கு எப்போதாவது தீர்வு கண்டுள்ளீர்களா?" என்ற கேள்விக்கு எப்போதும் "இல்லை" என்ற பதில்தான் அனைவரிடமிருந்தும் வரும்.

© UCLES 2025

இது போன்று குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் பல விரிசல்களுக்கும் குறுஞ்செய்திப் பரிமாற்றங்கள் காரணமாக உள்ளன. அதிகரித்த வேலை காரணமாக பல பெற்றோர்கள் இல்லத்திற்கு வெளியில் இருந்து தமது பிள்ளைகளுடன் குறுஞ்செய்திப் பரிமாற்றங்களுக்குப் பழகிப்போக, இதனால் பிள்ளைகளும் குறுஞ்செய்திகளுக்குப் பழகிப்போகின்றார்கள். இப்பழக்கம் இல்லத்திற்குள் அனைவரும் இணைந்து இருக்கும்போதும் தொடர்வது கவலைக்குரியது.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

## கட்டுரை 2

**இளைஞர்களின் வாழ்க்கையில் குறுஞ்செய்திகள்**

வேலை முடித்து வீடு திரும்பும் பெற்றோரை எத்தனை பிள்ளைகள் வாசலில் வரவேற்கிறார்கள்? எத்தனை பிள்ளைகள் பள்ளியில் நடந்தவற்றை பெற்றோருடன் தினமும் பகிர்கிறார்கள்? சமூக ஊடகங்களில் தெரியாத நபர்களோடு காட்டும் நட்பை எத்தனை பிள்ளைகள் தமது பெற்றோரிடம் காட்டுகிறார்கள்? குறுஞ்செய்திகளுக்குப் பழகிப் போன இளைஞர்கள் தமது பெற்றோருடன் ஒரே இல்லத்துக்குள் முகம் பார்த்து உரையாடத் தயங்குகிறார்கள். இது குடும்ப அங்கத்தினர்களுக்கிடையே நெருக்கமின்மையையும் தவறாகப் புரிந்துகொள்ளும் நிலையையும் ஏற்படுத்துகின்றது. இருந்தபோதிலும் இதனை இளைஞர்கள் தனித்திருந்து இணையத்தில் நேரம் செலவிடுவதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது வேதனைக்குரியது.

சமூகத்துடன் ஒட்டாமல் இருப்பதும் உற்சாகம் இல்லாமல் இருப்பதும் குறுஞ்செய்திகளுடன் அதிக நேரம் செலவழிப்பதன் விளைவுகள் ஆகும். குறுஞ்செய்திகள் உரிய முறையில், தேவைக்கேற்ப மட்டும் பயன்படுத்தப்படாவிட்டால் அது இளைஞர்களுக்கும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இடையில் மனரீதியிலான பாதிப்புகளுக்கு வழிவகுப்பதாக இருக்கும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இணையவழி செய்திப்பரிமாற்றத்துக்குப் பழகிப்போன இளையவர்களுக்கு மற்றவர்களுடன் முகம் பார்த்துப் பேசுவது சிரமமான காரியமாக மாறி வருகிறது. மற்றவர்களை நேருக்கு நேர் கண் பார்த்துப் பேச இளையவர்கள் பயப்படுகிறார்கள். செய்திப்பரிமாற்றத்துக்கு இமோஜிகளைப் பயன்படுத்திப் பழகிப்போன இளைஞர்கள் பொது இடங்களில் வார்த்தைகளைக் கோர்த்துப் பேசுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். தீவிர பிரச்சினை அல்லது சோகமான நிகழ்வின்போது இளைஞர்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் தன்னம்பிக்கை குறைந்தவர்களாக உள்ளனர். 'தொழில்நுட்பம்' என்னும் மிகப் பெரிய திரைக்குப் பின்னால் மறைந்து கொண்டு கற்பனை உலகில் வாழ்வதற்குப் பல இளைஞர்கள் பழகிக்கொள்கிறார்கள். இதனால் வாழ்க்கையில் மற்றவர்களுடன் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள்.

மற்றவர்களுடன் பேசுவது எப்படி என்பதை இயல்பாகக் கற்கும் காலம் மறைந்து, அவர்களுடன் உரையாடுவதற்குப் பயிற்சிகள் தேவைப்படும் நிலைமைக்கு இளைஞர்கள் தள்ளப்படுகிறார்கள். பள்ளிகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பத்தினால் பயன்கள் பல இருந்த போதிலும் மாணவர்கள் பலரது புத்தக வாசிப்புத் திறன் குறைவதற்கும், படைப்பாற்றல் திறன் மழுங்கிப் போவதற்கும் குறுஞ்செய்திகள் காரணமாக உள்ளன. கணினியில் ஒரு சொல்லைத் தட்டச்சு செய்யத் தொடங்கும்போது அது அச்சொல்லுக்கான முழு வடிவத்தையும் உடனடியாகத் தருகின்றது. இது எழுத்துப் பிழையில்லாது எழுதும் திறனை இளைஞர்கள் மத்தியில் மழுங்கடிக்கின்றது. இளைஞர்களின் விரல்கள் எழுதுவதற்குப் பழகாமல் தட்டச்சு எழுத்துக்களை அழுத்தப் பழகி விட்டன. இளைய சமுதாயத்தின் கையெழுத்து சீரில்லாமல் போவதற்கு இது முக்கிய காரணமாக உள்ளது.

காதலர்களுக்குள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நேரத்தில் குறுஞ்செய்தி வராவிட்டால் அவர் தன்னைவிட்டு வேறொருவரை விரும்புகிறார் என்றுதான் மனம் உடனடியாக நினைக்கும். குறுஞ்செய்தி வராத காரணங்களை சற்று நிதானித்து யோசித்து, அவருடன் பேசி, அதற்கான தீர்வுகளைச் சிந்திக்கும்முன் கோபத்துடன் அவருக்குக் குறுஞ்செய்தி ஒன்றை மட்டும் அனுப்பிவிட்டு விலகிய காதலர்கள் பலர் உள்ளனர். குறுஞ்செய்திகளை விட நேரடி உரையாடல்கள் பல உறவுசார் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்பதையும் இருவருக்கும் இடையிலான நம்பிக்கையை வளர்க்கும் என்பதையும் உறவுகளைப் பலப்படுத்தும் என்பதையும் இளைஞர்கள் உணர வேண்டும்.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.

© UCLES 2025